# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 3, 2021 Weekly E-paper • July 3, 2021




# பெரியாரின் மூன்றாம் ஆளுமை முதல்வர் ஸ்டாலின்

- பொள்ளாச்சி மா. உமாபதி

## இந்தியா ‘ஒன்றியம்’தான் !

மா. உதயகுமார்

## ‘சாதாரண’ அறிவும், வேதாகம அறிவும்!

-சுப. வீரபாண்டியன்

## தொடரும் மரணங்கள்?

தலையங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 3, 2021    Weekly E-paper • July 3, 2021


# பெரியாரின் மூன்றாம் ஆளுமை முதல்வர் ஸ்டாலின்

**- பொள்ளாச்சி மா. உமாபதி**



தந்தை பெரியாரின் கொள்கை, கோட்பாடுகளை நடைமுறைப்படுத்த ஆட்சி அதிகாரம் தேவை என்பதால், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல், சமுதாய சீர்திருத்தக் கட்சியைத் தொடங்கினார் பேரறிஞர் அண்ணா. 1967ஆம் ஆண்டுத் தேர்தலில் வென்று ஆட்சியைக் கைப்பற்றி முதல்வரான அவர் தமிழ்நாடு பெயர் மாற்றம், இருமொழிக் கொள்கை, சுயமரியாதைத் திருமணம் என்று மகத்தான சாதனைகளை நிறைவேற்றினார்.

அண்ணாவைத் தொடர்ந்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து தமிழ்நாட்டின் முதல்வரானார் தலைவர் கலைஞர் அவர்கள். அவர் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்று ஆற்றிய சாதனைகளால் தமிழ்நாட்டை இந்திய ஒன்றியத்தின் முன்னணி மாநிலங்களின் முதலில் நிற்கச் செய்தார்.

‘கை ரிக்ஷா’ ஒழிப்பு திட்டம், குடிசை மாற்று வாரியம், கண்ணொளி வழங்கும் திட்டம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், உழவர் சந்தை திட்டம், விவசாயிகள் கடன் தள்ளுபடி, ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம், பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, சத்துணவில் வாரம் 5 முட்டை, மாணவர்களுக்கு இலவச பேருந்து பயணம், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, இலவச எரிவாயு அடுப்பு, உயிர்காக்கும் உயர் சிகிச்சை திட்டம் போன்ற எண்ணற்றத் திட்டங்களால் தமிழ்நாட்டைத் தலை நிமிரச் செய்தார் முதல்வர் கலைஞர்.

இன்று திராவிட இயக்கத்தின் தொடர்ச்சியாக தந்தை பெரியாரின் கொள்கைகளை, கோட்பாடுகளை, இலட்சியங்களை ஏற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நிர்வாக ஆற்றலுடன் தமிழ் நாட்டின் முதல்வராக தளபதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் கடுமையான அரிசிப் பஞ்சம் தலைவிரித்தாடியது. ஆட்சிப் பொறுப்பேற்ற அண்ணா அவர்கள் அடுத்த இரண்டே ஆண்டுகளில் தமிழகத்தில் அரிசிப் பஞ்சத்தை முற்றிலுமாக நீக்கி, குஜராத்தில் ஏற்பட்ட அரிசிப் பஞ்சத்திற்கு உதவ 2000 டன் அரிசியை அனுப்பிவைக்கும் அளவிற்குத் தமிழ்நாட்டை மாற்றிக் காட்டினார்.

அதுபோல இன்று தளபதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கும் நேரத்தில் கொரோனா நோய்த்தொற்று தலை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் கொரோனா நோயாளிகள். மருத்துவமனைகளின் முன்பாக ஆம்புலன்சில் வரிசை கட்டி நிற்கும் நோயாளிகள். எல்லா மருத்துவமனைகளிலும் நோயாளிகள் நிரம்பி வழிந்தனர். ஆக்சிஜன் தட்டுப்பாடு, ஆக்சிஜன் பற்றாக்குறையால் உயிர்கள் பறிபோகும் ஆபத்தான நிலை நிலவும் நெருக்கடியான சூழல்.

முதல்வரின் விரைவான நடவடிக்கைகளால் தடுப்பூசிகள் அதிகம் வரவழைக்கப்பட்டன. ஆக்சிஜன் பற்றாக்குறை என்ற நிலையில் நாடு முழுவதும் உள்ள ஆக்சிஜன் உற்பத்தி நிலையங்களில் இருந்து ஆக்சிஜனைப் பெறவும், திரவ ஆக்சிஜன்களை ரயில் மூலம் கொண்டு வந்து ஆக்சிஜன் இல்லை என்ற குரலை இல்லாமல் செய்தார்.

அவரால் விரைவாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் நோய்த்தொற்று 50 ஆயிரத்தை எட்டும் என்ற வல்லுனர்களின் கூற்றைப் பொய்யாக்கிப் படிப்படியாகக் குறைத்து இன்றைக்கு ஐயாயிரத்துக்கும் குறைவாகக் கொண்டு வந்துள்ளார். இதுமட்டுமன்றி செங்கல்பட்டில் செயல்படாமல் கிடக்கும் தடுப்பூசி மருந்து ஆலையைச் செயல்பட வைக்கவும், அதனைத் தமிழ்நாடு அரசின் பொறுப்பில் தரவும் தொடர்ந்து ஒன்றிய அரசை வற்புறுத்தி வருகிறார் முதல்வர்.

அதுமட்டுமல்ல, அடுத்து வருவதாகப் பயமுறுத்தும் மூன்றாம் அலை கொரோனாவையும் சந்திக்க ஆயத்தமாக உள்ளார்.

**தொடர்ச்சி மறுபக்கம்**

## முன்பக்கத் தொடர்ச்சி...

இதற்குப் பெயர்தான் நிர்வாகத்திறன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் பெற்ற பயிற்சியின் வெளிப்பாடு.

கடந்த எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் ஆட்சியில் தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் போராட்டத்தில் காவல்துறையின் துப்பாக்கிச்சூட்டில் பலியான பதின்மூன்று உயிர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னும் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப வேலை தராமல் வருவாய்த்துறையில் கிராம நல அலுவலருக்குக் கீழ் தலையாரி வேலை கொடுக்கப்பட்டது. ஆனால் தளபதி அவர்களின் ஆட்சியில் அவர்களின் படிப்பைக் கருத்தில் கொண்டு வருவாய் ஆய்வாளர் வேலை வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல ஸ்டெர்லைட் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீதும் அய்யா நல்லகண்ணு, வைகோ போன்ற அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மீதும் புனையப்பட்ட வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற்று பேருதவி செய்துள்ளார். அதைப்போலவே கூடங்குளம் அணு உலை எதிர்ப்பாளர்கள் மீது புனையப்பட்ட வழக்குகளையும் தளபதி அவர்களின் அரசு திரும்பப் பெற்றுள்ளது.

மே 7 அன்று ஆட்சிப் பொறுப்பேற்ற அதே நாளில் தேர்தல் வாக்குறுதியான கொரானா நிவாரண நிதி ரூபாய் நாலாயிரத்தில் ரூபாய் இரண்டாயிரம் வழங்க உத்தரவிட்டார். அத்துடன் மகளிருக்குப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணத்திற்கும் உத்தரவிட்டார். இக்கட்டணமில்லாப் பயணம் மாற்றுத்திறனாளிகளுக்கும் திருநங்கையருக்கும் பொருந்தும் என்ற ஆணையிட்டார். ஆவின் பாலின் விலையை லிட்டருக்கு ரூபாய் மூன்று குறைத்தார். தேர்தலுக்கு முன் தன்னிடம் உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்ற நிகழ்வுகளில் மக்கள் தந்த மனுக்களை உடனடியாகப் பரிசீலித்து முடிவு காண திருமதி ஷில்பா பிரபாகர் என்ற ஐஏஎஸ் அதிகாரியை நியமித்துக் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தார்.

தளபதி அவர்களின் ஆட்சியில் டாக்டர் எழிலன் அவர்கள் தலைமையில் அதிமுக முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் உள்ளிட்ட அனைத்துக்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவை நியமித்துக் கொரோனா குறித்த அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டறிந்து செயல்பட்டு வருகிறார்.

*சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்*

என்ற வள்ளுவரின் வைர வரிகளுக்கு இலக்கணம் வகுக்கிறது இன்றைய தளபதி ஸ்டாலின் அவர்களின் தி.மு.கழக அரசு.

பெரும் பொருளாதார நெருக்கடியில் தமிழ்நாடு அரசு தள்ளாடுவதை உணர்ந்து அதிலிருந்து தமிழ் நாட்டை மீட்டு எடுக்க பொருளாதார மேதை ஜெயரஞ்சன் தலைமையில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவை அமைத்துள்ளார். அக்குழுவை கற்றறிந்த பொருளாதார வல்லுநர்கள், பேராசிரியர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மகளிர், திருநங்கையர் மருத்துவப் பிரதிநிதிகளைக் கொண்டு அமைத்துள்ளார்.

இன்று தமிழ் நாடு 5 லட்சம் கோடி கடனில் தத்தளிக்கிறது. அதனை சரி செய்ய, தேவையானத் திட்டங்களை வகுக்க



நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை எஸ்தர் டஃப்லோ, ரிசர்வ் வங்கி மேனாள் ஆளுநர் ரகுராம் ராஜன், பொருளாதார மேதைகள் அரவிந்த் சுப்பிரமணியம், ஜான் ட்ரீஸ், எஸ். நாராயணன் உள்ளிட்டோர் அடங்கிய பொருளாதார வல்லுநர்கள் குழுவை அமைத்து உள்ளார் என்பது முதல்வரின் தொலைநோக்குப் பார்வையைக் காட்டுகிறது.

தந்தை பெரியாரின் கனவான அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக 100 நாள்களில் நியமிக்கப்படவுள்ளனர். பயிற்சி பெற்ற மகளிரும் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட உள்ளனர். கேட்பாரற்று கொள்ளை போன பல்லாயிரம் கோடி மதிப்புள்ள கோயில் சொத்துகள் மீட்கப்பட்டு வருகின்றன.

தந்தை பெரியார் சித்தாந்தம். அதனைத் தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்த அண்ணா, கலைஞர் வழியில், மூன்றாம் ஆளுமையாகப் பரிணமிக்கிறார் முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## தொடரும் மரணங்கள்?

இந்திய ஒன்றியத்தின் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் ஒன்று "இந்தியத் தொழில்நுட்பக் கழகம் " என்ற ஐ.ஐ.டி.நிறுவனம். 1959ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இக்கல்வி நிறுவனம் தன்னாட்சி பெற்று, ஐ.ஐ.டி கவுன்சில் (அவை ) மூலம் நிர்வகிக்கப்படுகிறது. ஒன்றிய அரசின் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் இதன் தலைவர்.

இரண்டு நாள்களுக்கு முன்னர் இந்த ஐ.ஐ.டியின் உதவிப் பேராசிரியர் விபின், இக்கல்வி வளாகத்தில் சாதி, மதம், ஏற்றத்தாழ்வுகள், வேறுபாடுகள் இருப்பதாகவும், அதன் கோரத் தாண்டவத்தால் மன உளைச்சல் அடைந்து பணியாற்ற முடியவில்லை என்று சொல்லித் தன்பதவி விலகல் கடிதத்தை இணைய வழியில் அனுப்பியுள்ளார்.

இது இன்று நேற்றையப் பிரச்சனையன்று. உயர்சாதி, தாழ்த்தப்பட்ட பட்டியல் / மலைவாழ் சாதி என்று சாதி அடிப்படையிலும், மத வேறுபாட்டுக் காழ்ப்புணர்ச்சியிலும் மாணவர்கள், ஆசிரியர்களிடையே பார்ப்பனியம் தலைதூக்கி ஆடுவதன் விளைவு இது.

இஸ்ரோ விஞ்ஞானி கேரளத்தைச் சேர்ந்த ரகுவின் மகனான ஆய்வு மாணவர் உன்னிகிருஷ்ணனின் எரிந்த உடல் ஐ.ஐ.டி. வளாகத்தில் கிடந்துள்ளது.




1990களில் கணித மேதை வசந்தா கந்தசாமி உயர் சாதிய ஆதிக்கத்தில் பட்டபாடு சொல்லும் தரமன்று.

2019ஆம் ஆண்டு கேரளாவைச் சேர்ந்த பாத்திமா லத்திப் இதே வளாகத்தில் தற்கொலை செய்துள்ளார். தன் மரணத்திற்குக் காரணம் பேராசிரியர் சுதர்சன் பத்மநாபன் உள்ளிட்ட மூவர் என அவரே பதிவு செய்திருந்தார். என்ன நடவடிக்கை எடுத்தனர் ?

இதுவரை இங்கு19 மரணங்கள் நிகழ்ந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் வருகைப் பதிவும், மதிப்பெண் குறைவும் எனநிர்வாகம் சொன்னாலும், அது பொருத்தமாகப் படவில்லை.

சாதியம், மதம் என்ற பார்ப்பனிய ஆதிக்கமே இங்கு ஆளுமையில் இருப்பது கண்கூடு, வேதனைக்கு உரியது, கண்டிக்கத் தக்கது.

இதற்குத் தீர்வு காண என்ன செய்யப் போகிறது ஐ.ஐ.டி நிறுவனம் !

# இந்தியா ‘ஒன்றியம்’தான்!

மா. உதயகுமார்

இந்திய அரசமைப்பின் பகுதி 1, ஒன்றியமும் அதன் ஆட்சிநிலவரையும் என்னும் தலைப்பில் தொடங்குகிறது. அதில் முதல் வரி ஒன்றியத்தின் பெயரைச் சொல்கிறது.

1. Name and territory of the Union.—(1) India, that is Bharat, shall be a Union of States.

ஒன்றியத்தின் பெயரும் ஆட்சி நிலவரையும் : இந்தியா எனும் பாரதம் மாநிலங்களைக் கொண்டதோர் ஒன்றியமாக இருக்கும்.

முதல் வரியிலேயே இவ்வளவுத் தெளிவாக ஒன்றியம் என்று அரசமைப்பில் சொல்லப்பட்ட பிறகும், காலம் காலமாகக் குறிக்கப்பெற்றும் வரும் நிலையிலும் அண்மையில் “இந்திய ஒன்றியம்” என்னும் சொல்லாடல் விவாதப் பொருள் ஆகியிருப்பதோடு, அச்சொல்லாடலை எதிர்ப்பவர்கள் நீதிமன்றம் வரையிலும் சென்று திரும்பியிருக்கிறார்கள்.

ஏன் ஒன்றியம் என்கிற சொல்லைக்கேட்டவுடன் பா.ஜ.கவினரும் அவர்களை பின்னின்று இயக்கும் பார்ப்பனிய சங் பரிவார் கும்பலும் பதறுகிறார்கள்? அரசமைப்பின்படி ஒன்றிய(Union) அரசாக இருக்கும் இந்தியாவை, ஒற்றைத் தன்மை(Uniformity) கொண்ட ஓர் உறுப்பு அரசாக மாற்றும் பாசிச போக்கில் நாட்டை பா.ஜ.க ஆட்சி செய்துவருகிறது. இன்று பல்வேறு மாநிலங்களிலும் ஜனநாயகத்தைப் படுகொலை செய்து பா.ஜ.க ஆட்சியைப் பிடித்திருக்கிறது. மாநிலங்களின் அதிகாரங்களைத் தொடர்ந்து பறித்து வருகிறது. இதை எதிர்த்து எந்த ஒரு மாநிலமும் பெரிய அளவில் குரல் எழுப்பவில்லை. கேரளா மேற்கு வங்கம் போன்ற மாநிலங்கள்கூட பா.ஜ.க எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுக்கின்றனவேயன்றி மாநில சுயாட்சிக்கான குரலாகத் தீர்க்கமானக் கொள்கை அடிப்படையில் எதிர்ப்பை முன்வைப்பதில்லை. இந்தியாவிலேயே தமிழநாடுதான் அதற்கான முன்னோடியாகத் திகழ்கிறது.

“மத்தியிலே கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி” என்னும் முழக்கம், இரு மொழிக் கொள்கை, இராஜமன்னார் குழு அறிக்கை, மாநில முதல்வர்கள் தேசியக் கொடியேற்றும் உரிமையைக் கலைஞர் பெற்றுத் தந்தது என பெருமைமிகு வரலாறு கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியல்லவா அமைந்திருக்கிறது. 10 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அடிமை அரசு அகன்று, இன்று பெரியார் அண்ணா கலைஞர் வழியில் ஆட்சியமைத்திருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் “Belongs to the Dravidian Stalk” என்னும் கருத்தியலைப் பேசு பொருளாக மாற்றியிருக்கிறார்.

ஆட்சியமைத்தது முதல் முதன்மையான பணியாக கொரோனாவை எதிர்த்துக் களமாடிக் கொண்டிருக்கும் இக்கட்டான வேளையில் கூட திமுக அரசானது தொடர்ந்து மாநிலத்திற்கான உரிமைகளை மீட்டெடுப்பதில் இன்னொரு புறம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. நீட் பாதிப்புகளைப் பற்றி ஆராய நீதியரசர் ஏ.கே.இராஜன் தலைமையிலான குழு அமைத்தது, புதிய கல்விக் கொள்கையை நுழைய விடமாட்டோம் என்னும் நிலைப்பாட்டை அறிவித்தது எனத் தொடர்ந்து உரிமைகளைக் காக்கப் போராடிவருகிறது.

திமுகழகத்தின் பெருமைமிகு வரலாறும், இன்றைய முழுவீச்சான செயல்பாடும் பாசிசவாதிகளைப் பதறச் செய்கின்றன. அதனால்தான் அரசமைப்பில் இருக்கிறபடி ‘ஒன்றியம்’ என்று சொன்னால்கூட அவர்களால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

ஆனால் இது போன்ற நிலை ஒருநாள் வரும் என்று அரசியல் நிர்ணய சபையில் அன்றே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

“நமது அரசு ஒரு கூட்டாட்சி அரசாகத்தான் இருக்க வேண்டும் என்றும், ஓர் உறுப்பு அரசு அன்று என்றும் நீங்கள் கருதினால், வருங்காலத்தில் எந்தவொரு பதவி மோகக் கட்சியும் இதை ஓர் உறுப்பு அரசாகவும், பாசிச - சர்வாதிகார அரசாகவும் மாற்றுவதை நீங்கள் தடுக்க விரும்பினால், அந்தச் சொல்லை மாற்றிக் கூட்டாட்சி என்கிற சரியான சொல்லைப் பயன்படுத்துவது இப்போது நம் கையிலே இருக்கிறது. அதனால் ‘யூனியன்’ என்கிற வார்த்தைக்குப் பதில் ‘கூட்டாட்சி’ என்கிற வார்த்தையைச் சேர்க்குமாறு நான் முன்மொழிகிறேன்.”




மெஹபூப் அலி பெய்க் சாகிப் பகதூர்
(15.11.1948இல் அரசியல் நிர்ணய சபையில்)

ஆனால் இது போன்ற வாதங்கள் அன்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கொண்டு வந்த 1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்திலிருந்துதான் பெரும்பகுதி இந்திய அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. ஆனால் 1935ஆம் ஆண்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ‘கூட்டாட்சி’ என்ற சொல் இடம்பெறாமல், இந்திய அரசியலமைப்பில் ‘ஒன்றியம்’ என்ற சொல்லே இடம்பெற்றது.

இதுவரை ‘கூட்டாட்சி’, ‘மாநில சுயாட்சி’ என்கிற சொற்களைக் கேட்டுத்தான் பதறினார்கள். தங்களிடம் அதிகாரத்தை வைத்துக்கொண்டு பார்ப்பனியத்தை நிலைநாட்ட, மாநில சுயாட்சிக்காகக் குரல் கொடுத்த திராவிட இயக்கத்தவர்களைப் பிரிவினைவாதிகள், தீவிரவாதிகள் என்று பொய் பரப்புரை செய்து வந்தார்கள். ஆனால் இன்று ஒன்றியம் என்று சொல்லும்போதே பதறுகிறார்கள். பிரிவினை ஏற்பட்டுவிடும் என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கிறார்கள். அவர்கள் ஒன்றிய (Union) அரசை முழுதும் ஒற்றை (Unitary) அரசாக மாற்றப் பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள். இந்த நிலையில் நாம் இங்கு ஒன்றிய அரசு என்று சொல்வது அவர்களுக்குச் சம்மட்டி அடியாக இருக்கிறது.

வலுவான கூட்டாட்சி கொண்ட அமெரிக்கா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் பெருவளர்ச்சி பெற்றிருக்கின்றன. அதிகாரப் பரவலாக்களை(Decentralization) உலக நாடுகள் நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருக்கும் சூழலில் நாம் தொடர்ந்து மாநில சுயாட்சிக்காகக் குரல் கொடுப்போம். உண்மையான கூட்டாட்சி மலரும் வரை, ஒன்றிய அரசு ஒற்றை அரசாகப் பின்னோக்கிச் சென்றுவிடாமல் பாதுகாப்போம். ●

# ‘சாதாரண’ அறிவும், வேதாகம அறிவும்!

-சுப. வீரபாண்டியன்

மருத்துவக் கல்லூரிகளில் இடம்பெறுவதற்கான நீட் என்னும் நுழைவுத் தேர்வு, அனிதா உள்ளிட்ட நம் பிள்ளைகள் பலரின் உயிர்களை எடுத்துச் சென்றுவிட்டது. தமிழ்நாட்டிற்கு அத்தேர்வு வேண்டாம் என்ற நம் குரலை இன்றுவரையில் ஒன்றிய அரசு உள்வாங்கிக் கொள்ளவில்லை.

புதிதாய்ப் பொறுப்பேற்றிருக்கும் இன்றைய தமிழக அரசு, நீட் தேர்விலிருந்து விலக்குக் கோருவதற்கானச் சரியான நடைமுறையை இப்போது கையில் எடுத்துள்ளது. பிரதமர் மோடி அவர்களைச் சந்தித்த போதும் அக்கோரிக்கையை நம் முதல்வர் முன்வைத்தார். அதனைத் தாண்டி நீட் தேர்வினால் ஏற்பட்ட பாதிப்புகளை முழுமையாக அறிந்து கொள்வதற்கு நீதிபதி ஏ.கே. ராஜன் தலைமையில் ஒரு குழு இப்போது அமைக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவின் செயல்பாட்டிற்குத் தடை விதிக்கக் கோரி, தமிழ்நாடு பாஜக வின் பொறுப்பாளர்களில் ஒருவரான கரு. நாகராஜன் நீதிமன்றம் சென்றுள்ளார். இப்படி ஒரு குழுவை அமைப்பதற்கு, உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுள்ளீர்களா என்று உயர்நீதிமன்றம் கேட்கிறது.

அந்தக் குழு நீட் வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செய்வதற்கான குழு அன்று. நீட் தேர்வினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை ஆராய்வதற்கான குழு மட்டுமே. அதனை அறிந்து கொள்வதற்குக் கூட ஓர் அரசுக்கு உரிமை இல்லையெனில், இது என்ன ஜனநாயக நாடு?

இந்த நிலையில் இது குறித்துக் கலந்துரையாடுவதற்காகத் திராவிடர் கழகம் 01.07.2021 அன்று காலை, சென்னை, பெரியார் திடலில், சமூகநீதிச் சிந்தனையாளர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டியது. அதில் திமுக, காங்கிரஸ், மதிமுக, இரண்டு பொதுவுடைமைக் கட்சிகள், விடுதலைச் சிறுத்தைகள், முஸ்லீம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, ஆதித் தமிழர் பேரவை, திராவிட இயக்கத் தமிழர் பேரவை உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் சார்பில் பலரும் பங்கேற்றனர்.

பாஜக தொடர்ந்துள்ள வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வாதிடும், தமிழக அரசுக்கு ஆதரவாகப் பல்வேறு கட்சிகளும் அவ்வழக்கில் தங்களையும் இணைத்துக் கொள்வதாக (impleading) அன்று முடிவெடுத்தன.

நீட் தேர்வில் தமிழ்நாட்டிற்கு விதிவிலக்குக் கோருவது கூட இடைக்காலத் தீர்வுதான். 1976 ஆம் ஆண்டு மாநிலப் பட்டியலிலிருந்து ஒத்திசைவுப் பட்டியலுக்கு (concurrent list) எடுத்துச் செல்லப்பட்ட கல்வியை மீண்டும் மாநில அரசின் பட்டியலுக்கு மீட்டு வருவதே நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும்.




இந்நிலையில், பாஜக நீதிமன்றத்தில் அளித்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள சில வரிகளையும்,அனைத்துக் கட்சிக் கூட்டம் வன்மையாகக் கண்டித்துள்ளது. மனுவில், "நீட் தேர்வு இல்லையென்றால், சாதாரண, மிகச் சாதாரண அறிவுள்ளவர்கள் கூட மருத்துவர்கள் ஆகிவிடுவார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிவில் எது பேரறிவு, எது சாதாரண அறிவு என்பதைப் பாஜகதான் விளக்க வேண்டும். வேதாகம அறிவுதான் பெரிய அறிவு என்றும், உழைக்கும் மக்களின் அறிவு சாதாரண அறிவு என்றும் பாஜக கருதுகின்றது போலும். இந்த வரிகளுக்குள் ஒரு பார்ப்பனிய ஆணவம் இருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. மீண்டும் ஒரு சாராருக்கு மட்டுமே கல்வி, அரசின் உயர் பதவிகள் அனைத்தும் உரியன என்பதை நிலைநாட்டவே இம்முயற்சிகள் நடக்கின்றன என்பதை நம்மால் உணர முடிகிறது. சனாதனக் கருத்தியலை இம்மண்ணில் மீண்டும் நிறுவிட, திராவிடக் கருத்தியல் தடையாக இருக்கிறதே என்ற ஆதங்கமும், திமு கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட்டதே என்ற கவலையும் அவர்களை ஆட்டிப் படைப்பதை நம்மால் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது.

என்ன செய்வது.......நீதிமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் அவர்களின் தோல்வி தவிர்க்க முடியாததாகவே இருக்கிறது!

## பேரவையும் இணைந்து கொள்கிறது!

**நீட் தேர்வின் பாதிப்புகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையிலான குழு நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும் என்று கேட்டு பாஜக தொடர்ந்துள்ள வழக்கைத் தள்ளுபடி செய்யக் கோரி நீதிமன்றத்தில் பல வழக்குகள் தொடரப்படவுள்ளன. அவ்வழக்கில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையும் தன்னை இணைத்துக் கொள்கிறது. பேரவையின் சார்பில் வழக்கறிஞர் அருள்மொழி நீதிமன்றத்தில் வாதிடுவார்.**



ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்,**
**சாரதா தேவி**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-2472 6408**